ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2147/51 - 2019 ඔක්තෝබර් මස 30 වැනි බදදා - 2019.10.30
*2147/51 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: 3/3/6/2/30.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

பாரிய மாத்தளை நீர் வழங்கல் செயற்திட்டத்தின் உக்குவளை பொறுப்பு அலுவலர் அலுவலகம் அமைப்பது தொடர்பாக காணியை எடுத்துக்கொள்ளல்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மத்திய மாகாணத்தில், மாத்தளை மாவட்டத்தில், உக்குவளை பிரதேச செயலகப் பிரிவில், மாத்தளை மெதசியபத்துவயில் உக்குவளை கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள, நில அளவை அதிபதி சார்பாக மாத்தளை நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. மா 1780 கொண்டதுமான, 0.1522 ஹெக்டாயர் விஸ்தீரணமுடைய காணித் துண்டு இல. 01 இன் விபரம் :

*01. துண்டு இல. 01*

உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : சாந்தி முணசிங்க, சமகி மாவத்தை, உக்குவளை; விஸ்தீரணம் : 0.1522 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 04 ஆந் திகதி மு. ப. 09.30 மணிக்கு உக்குவளை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எஸ். என். கே. சேரசிங்க,
பிரதேச செயலாளர்,
உக்குவளை.

பிரதேச செயலகம்,
உக்குவளை,
2019, ஒற்றோபர் 25.

11 - 1035

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

*1966.01.21* ஆந் திகதிய *14,644* ஆம் இலக்க வர்த்தமானியின் அறிவிப்பு தொடர்பாக.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்** :

ஆரம்ப வரைபட இல.: கொ *93*; கிராமம் : அஹுகம்மன; பிரதேச செயலாளர் பிரிவு : மஹர ; மாவட்டம் : கம்பஹா.

*01*. **துண்டு இல. *01***
காணியின் பெயர் : மில்லகஹவத்தை; விஸ்தீரணம் : 0ஏ, 0ரூ, *23.7* பேர்ச்சஸ்.

*02*. **துண்டு இல. *02***
காணியின் பெயர் : மெதலந்தவத்தை; விஸ்தீரணம் : 2ஏ, 0ரூ, *1.5* பேர்ச்சஸ்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக *2019* ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் *20* ஆந் திகதி மு. ப. *10.00* மணிக்கு மஹர பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் *2019* ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் *13* ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஜீ. எஸ். ஐ. விமலசேன,
பிரதேச செயலாளர்,
மஹர.

பிரதேச செயலகம்,
மஹர,
*2019*, ஒற்றோபர் *29*.

*11 - 1036*